# 1C உருக்காட்டல், கலந்துரையாடல் மற்றும் ஆழமான பகுப்பாய்வு

1. இயல் 1A.2 இல் உள்ள பா.மொ.க வின் இலக்குகள் பற்றியதை நீங்களாகவே தயவாக மீளாய்வு செய்யுங்கள். உங்களுக்கு வினாக்கள் ஏதும் இருப்பின் அல்லது கூறப்பட்ட நோக்கு அல்லது நோக்குகள் பற்றித் தெளிவில்லாவிடின், முதலில் தனியாக பின்னர் (முடியுமெனில்) சிறிய குழுவில் எண்ணிப் பார்க்கவும்.

2. இயல் 1A.2 இல் உள்ள பா.மொ.க வின் இலக்குகள் பற்றியதை இரண்டாவது தடவையாக தயவாக மீளாய்வு செய்யுங்கள். இவ் இலக்குகளில் எவை குறிப்பாக உங்களுக்குப் பொருத்தமானவை என்றும் இந் நோக்குகளை அடைதற்கு நீங்கள் என்ன பங்களிப்பைச் செய்யலாம் என்பதை தயவாக எண்ணிப்பார்த்துக் கலந்துரையாடவும்.

3. இலக்குகளுக்குத் திரும்புதல்: கூறப்பட்ட நோக்குகளுக்கு ஏற்கனவே எங்கு எப்படி நீங்கள் பங்களித்துள்ளீர்கள் "புலம்பெயர் நாட்டு சமூகத்துடன் ஈடுபாடு மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடு ஆகியவற்றுக்கான பக்கத்துணை" மற்றும் "புலம்பெயர் நாட்டுப் பள்ளியுடன் ஒருங்கிணைப்பு மற்றும் ஈடுபடுத்தல் செயற்பாட்டுக்கான பக்கத்துணை" அல்லது இவ் இன்றியமையாத பணியினை நிறைவுசெய்ய நீங்கள் என்ன செய்யலாம் என்பதை எண்ணிப்பார்த்துக் கலந்துரையாடவும்.

4. பிரிவு 4, "பள்ளி அமைப்புடன் ஒருங்கிணைதல்" முழுவதையும் இன்னொரு தடவை தயவாக படிக்கவும். உங்கள் பா.மொ.க வின் இன்றைய நிலைப்பாடு என்ன? உங்கள் விருப்புகளும் பார்வைகளும் என்ன, இக்கனவுகளை நனவாக்க நீங்கள் (தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து) என்ன செய்வீர்கள்?

5. பகுதி 6 இல் மாணவர் அமைப்பின் பரிமாணங்கள் மற்றும் பல்வகைத்தன்மை பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக உங்கள் பட்டறிவுகளைத் தயவாகக் கருத்தில்கொண்டு கலந்துரையாடுக. அவை தொடர்பான சில சிக்கல்களை வெற்றிகரமாக எவ்வாறு தீர்த்தீர்கள் என்பதை மற்றவர்களுக்கு அறிக்கை இடுக.

6. இயல் 1 பகுதி B யிலுள்ள (இயல் 2 இலுமுள்ள) அறிக்கைகளை தயவாகப் படிக்கவும். இவ்வியல்களில் விவரிக்கப்பட்ட எத்தகைய பட்டறிவுகள் பா.மொ.க ஆசிரியராக உங்கள் தொடக்க தொழில் வாழ்வில் பெற்ற பட்டறிவுகளை ஒத்திருக்கின்றன? எவை உங்களை மிகவும் அக்கறைப்படுத்துகின்றன?

7. பா.மொ.க ஆசிரியராக கடந்த 1-2 ஆண்டுகளாக உங்கள் பணியினைப் பின்னோக்கிப் பார்த்தால்: எவை மதிப்புமிகு தருணங்கள் அல்லது சூழ்நிலைகள் எனலாம்? ஒருவர்க்கொருவர் நோக்குகளை பரிமாற்றம் செய்க மற்றும் மதியுரைகளை வழங்குக.